அலகு 3

# ஊராட்சி மன்றம்

## கற்றல் நோக்கங்கள்

- ஊராட்சி மன்றம் பற்றி அறிந்துகொள்ளல்.
- ஊராட்சி மன்றம் கிராம மக்களுக்கு அடிப்படை வசதிகளை அளிக்கிறது என்பதனைத் தெரிந்துகொள்ளல்.
- கிராம சபையின் பணிகள் பற்றி தெரிந்துகொள்ளல்.
- உள்ளாட்சியைப் பற்றி தெரிந்துகொள்ளல்.



HPP6H7



3rd_Social_Science_Unit_3.indd 146 2/19/2020 8:17:05 PM






3rd_Social_Science_Unit_3.indd 147 2/19/2020 8:17:06 PM

தண்டோரா அறிவிப்பைக் கேட்டு இனியன் வீட்டிற்கு ஓடுகிறான்.

**இனியன்:** அப்பா, தண்டோரா அறிவிப்பாளர் என்ன கூறினார்?

**தந்தை:** கிராம சபை கூட்டம் சுதந்திர தினத்தன்று கூட்டப்படும் என்று கூறினார்.

**இனியன்:** கிராம சபை கூட்டம் என்றால் என்ன? அவர்கள் அக்கூட்டத்தில் என்ன செய்வார்கள்?


**தந்தை:** மக்கள் கிராமத்தில் ஒன்றாகக் கூடி ஊராட்சி மன்றப் பணிகளைப் பற்றி விவாதிப்பர்.

**இனியன்:** அப்படியா! ஊராட்சி மன்றம் என்றால் என்ன?



**தந்தை:** நீ கேட்பது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. நான் ஊராட்சி மன்றத்தைப்பற்றிக் கூறுகிறேன்.

நமது நாடு மிகவும் பெரிய நாடு. இதில் அதிக நகரங்களும், கிராமங்களும் உள்ளன. எனவே ஊராட்சி மன்றங்களும் அதிக அளவில் செயல்படுகின்றன. ஊராட்சி அமைப்பின் அடிப்படை கிராம ஊராட்சி ஆகும். இது கிராம மக்களுக்கு அடிப்படை வசதிகளை வழங்குகிறது. **73வது இந்திய அரசியலமைப்பு திருத்தச் சட்டம்** ஏப்ரல் 1993 இல் நடைமுறைக்கு வந்தது. **73வது இந்திய அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தின்** முக்கிய அம்சம் பஞ்சாயத்து ராஜ்ஜின் **மூன்றடுக்கு பஞ்சாயத்து முறையாகும்**. ஒவ்வொரு கிராம ஊராட்சியும் 500 மற்றும் 500க்கு மேற்பட்ட மக்களைக் கொண்டிருக்கும்.




**இனியன்:** அப்பா, கிராம ஊராட்சியில் யாரெல்லாம் உறுப்பினர்களாக இருப்பார்கள்?

நாம் அறிந்து கொள்வோம்.

**12,620 கிராம ஊராட்சிகள் தமிழ்நாட்டில் உள்ளன.**



NMZKU5



3rd_Social_Science_Unit_3.indd 149 2/19/2020 8:17:07 PM

**தந்தை:** **தலைவர், துணைத்தலைவர்** மற்றும் **வார்டு உறுப்பினர்கள்** (6 லிருந்து 15 வரை) இருப்பார்கள்.

**இனியன்:** ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்?

**தந்தை:** கிராம மக்கள் ஊராட்சி மன்றத் தலைவரையும், உறுப்பினர்களையும் நேரடித் **தேர்தல்** மூலம் தேர்ந்தெடுப்பர். ஊராட்சி மன்றத் துணைத் தலைவரை வார்டு உறுப்பினர்கள் தேர்ந்தெடுப்பர். அவர்களின் பதவிக்காலம் **ஐந்து ஆண்டுகள்** ஆகும்.

## செயல்பாடு

### விடையளிப்போம்

1. உங்கள் கிராம பஞ்சாயத்துத் தலைவரின் பெயரை எழுதுக.

_______________________________________________

2. உங்கள் கிராம பஞ்சாயத்தில் எத்தனை வார்டு உறுப்பினர்கள் உள்ளனர்?

_______________________________________________





3rd_Social_Science_Unit_3.indd 150 2/19/2020 8:17:08 PM

**நாம் அறிந்து கொள்வோம்.**

சோழ அரசு **குடவோலை** முறையின் மூலம் கிராம நிர்வாகத்திற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தனர் என்பதைக் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள **உத்திரமேரூர்** கல்வெட்டுகள் மூலம் அறிந்துக்கொள்கின்றோம்.

**குடவோலை** என்பது நமது பாரம்பரிய தேர்தல் முறை.



கிராம மக்கள் ஒன்று கூடி அவர்களுக்கு விருப்பமானவர்களின் பெயர்களைப் பனை ஓலைகளில் எழுதி, **குடத்திற்குள்** போடுவார்கள். ஒரு சிறுவனை அழைத்து பனை ஓலைகளை ஒவ்வொன்றாக எடுக்கச் செய்வர். பனை ஓலைகளில் எத்தனை நபர்களின் பெயர்கள் உள்ளனவோ, அவர்களே தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுவர்.



## செயல்பாடு

### நாம் எழுதுவோம்

உங்கள் வகுப்பில், வகுப்பு தலைவரைக் **குடவோலை** முறையின் மூலம் தேர்ந்தெடுக்க.

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________



3rd_Social_Science_Unit_3.indd 151 2/19/2020 8:17:15 PM



**இனியன்:** அப்பா, இம்மன்ற உறுப்பினர்களின் பணி என்ன?

**தந்தை:** மக்களுக்கு அடிப்படை வசதிகளை அளிப்பது அவர்களின் முக்கியப் பணியாகும்.

**ஊராட்சி மன்றத்தால் செயல்படுத்தப்படும் கட்டாயப்பணிகள் ( Obligatory functions):**

1. மின்சாரம் வழங்குவது மற்றும் தெருவிளக்குகளைப் பராமரித்தல்.
2. பொதுக் கிணறு பராமரித்தல்.
3. குடிநீர் வழங்குவது.
4. சாலைகள் போடுவது மற்றும் பராமரித்தல்.
5. கழிவுநீர்க் கால்வாய்களை ஏற்படுத்துதல்.
6. சிறிய பாலங்களைக் கட்டுதல்.
7. தொடக்கப்பள்ளி கட்டடங்களைப் பழுதுபார்த்தல்.
8. சுகாதார வசதிகளை அளித்தல்.







**இனியன்:** அப்பா, அவர்கள் அதிகமாகப் பணிகளைப் புரிகின்றனர். அதற்கு அதிக பணம் தேவைப்படும் அல்லவா?



**கிராம சுவராஜ்** என்ற வார்த்தை முதன்முதலில் **மகாத்மா காந்தியால்** அறிமுகப்படுத்தப்பட்டது.





தந்தை: ஆம், மத்திய மற்றும் மாநில அரசாங்கம் கிராம ஊராட்சிக்குத் தேவையான நிதியை வழங்கும். அவர்கள்அந்நிதியை கிராம வளர்ச்சிக்காக பயன்படுத்துவர். நாம் ஊராட்சி மன்றத்திற்கு வரி செலுத்துகிறோம். **வரி வசூலிப்பது** கிராம ஊராட்சி மன்றத்தின் முக்கியப் பணியாகும்.

அவர்கள் சில **தன்னார்வப்பணிகளை** (Discretionary function) மேற்கொள்வர்.



1. சாலைகளின் ஓரங்களில் மரம் நடுதல்.
2. பொது அங்காடிகளை அமைத்தல்.
3. பூங்காக்களை ஏற்படுத்துதல்
4. தங்கும் விடுதிகளை உருவாக்குதல்.
5. விளையாட்டு மைதானங்களை உருவாக்குதல்.
6. நூலகங்களை உருவாக்குதல்.
7. முதியோர்களுக்கான கல்வி நிலையங்களை ஏற்படுத்துதல்.
8. கிராம விழாக்களைக் கொண்டாடுதல்.
9. கிராமத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்ளுதல்.

1. உனது கிராமத்தில் நூலகம் உள்ளதா?
2. உனது கிராமத்தில் பூங்கா உள்ளதா?
3. உனது கிராமத்தில் விளையாட்டு மைதானம் உள்ளதா?






3rd_Social_Science_Unit_3.indd 153 2/19/2020 8:17:22 PM

## சிறந்த பஞ்சாயத்து விருது பெற்ற கிராமம்

### வியக்க வைக்கும் கிராமம்

கோயம்புத்தூரில் உள்ள ஒடந்துறை ஊராட்சியில் 850 வீடுகள் இலவசமாக கட்டித்தரப்பட்டுள்ளன. அவ்வூராட்சி அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்துள்ளது.

இந்த கிராமம் கீழ்க்கண்ட விருதுகளைப் பெற்றுள்ளது.

1. நிர்மல் புரஸ்கார் விருது
2. பாரத ரத்னா ராஜீவ்காந்தி சுற்றுச்சூழல் விருது

### சிந்தனை செய்



உனது கிராமம் ஏதேனும் விருது வாங்கியுள்ளதா?



**இனியன்:** அப்பா.... நாளை நடைபெறும் கிராம சபை கூட்டத்திற்கு நீங்கள் செல்வீர்களா?

**தந்தை:** கண்டிப்பாக நான் செல்வேன். கிராம சபை கூட்டத்தில் பங்கு பெறுவது முக்கியம். கிராம சபை கூட்டத்தில் கிராம வளர்ச்சிக்கான பணிகளைப் பற்றி விவாதிப்போம்.



### நாம் அறிந்து கொள்வோம்.

கிராம சபை மக்களாட்சியின் அடிப்படையாக விளங்குகிறது.



கிராம சபை கூட்டம் வருடத்திற்கு குறைந்தபட்சம் நான்கு முறை கூட்ட வேண்டும்.

கிராம சபை கூட்டம் நடைபெறும் நாட்கள்:

| | |
|---|---|
| ஜனவரி 26 | (குடியரசு தினம்) |
| மே 1 | (தொழிலாளர் தினம்) |
| ஆகஸ்ட் 15 | (சுதந்திர தினம்) |
| அக்டோபர் 2 | (காந்தி ஜெயந்தி) |



3rd_Social_Science_Unit_3.indd 154 2/19/2020 8:17:24 PM

### கிராம சபையின் பணிகள்

1. வளர்ச்சிப் பணிகளைத் திட்டமிடுதல் மற்றும் செயல்படுத்துதல் (Executing).
2. கிராம வரவு–செலவுகளைக் கண்காணித்தல்.
3. மக்களின் குறைகளைத் தீர்த்து வைத்தல்.

## நகராட்சி

கிராம ஊராட்சி போன்றே நகராட்சியும் செயல்படுகிறது. **நகராட்சி** 5,000 முதல் 30,000 வரை மக்கள் தொகையைக் கொண்டுள்ளது. நகர மன்றத் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவிக்காலம் **ஐந்து வருடங்கள்** ஆகும். நகரத்திலுள்ள மக்களின் தேவைகளைப் பூர்த்திச்செய்வது நகரமன்றத்தின் பணி ஆகும்.



### கலைச் சொற்கள்

| | |
|---|---|
| **தன்னார்வப்பணி** | : Discretionary function |
| **செயல்படுத்துதல்** | : Executing |
| **கட்டாயப்பணி** | : Obligatory function |



## மீள்பார்வை

- ஊராட்சி மன்றம் மக்களுக்கு அடிப்படைத் தேவைகளை அளிக்கிறது.
- பஞ்சாயத்து ராஜ் என்பது மூன்றடுக்குப் பஞ்சாயத்து முறை ஆகும்.
- வரி வசூலிப்பது ஊராட்சி மன்றத்தின் முக்கிய பணியாகும்.
- கிராம சபை கூட்டம் வருடத்திற்கு நான்கு முறை கூடவேண்டும்.
- கிராம ஊராட்சிப் போன்றே நகராட்சியும் செயல்படுகிறது.



3rd_Social_Science_Unit_3.indd 155 2/19/2020 8:17:25 PM

# மதிப்பீடு

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

1. ஊராட்சி என்பது _____________ அரசில் அடங்கும்.

   அ) மாவட்டம் ஆ) மாநிலம் இ) கிராமம்

2. 'கிராம சுவராஜ்' என்ற வார்த்தையை முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர்_____________.

   அ) காமராசர் ஆ) மகாத்மா காந்தி இ) நேரு

3. மூன்றடுக்கு முறையின் அடிப்படை_____________ ஊராட்சி ஆகும்.

   அ) மாவட்டம் ஆ) வட்டாரம் இ) கிராமம்

4. ஊராட்சிமன்றத் துணைத்தலைவர் யாரால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்?

   அ) மக்கள் ஆ) வார்டு உறுப்பினர்கள் இ) மாவட்ட ஆட்சியர்

5. கிராம சபை உறுப்பினர் பணிக்காலம்_____________.

   அ) 15 ஆண்டுகள் ஆ) 10 ஆண்டுகள் இ) 5 ஆண்டுகள்

## II. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. குடவோலை | - | வளர்ச்சித்திட்டம் |
| 2. ஊராட்சி மன்றம் | - | கட்டாயப்பணி |
| 3. மரம் நடுதல் | - | பாரம்பரிய தேர்தல் முறை |
| 4. தெருவிளக்கு | - | தன்னார்வப்பணி |
| 5. கிராம சபை | - | 500க்கு மேற்பட்ட மக்கள் தொகை |



3rd_Social_Science_Unit_3.indd 156 2/19/2020 8:17:28 PM

**III. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.**

1. ஊராட்சி மன்றம் என்றால் என்ன?
2. குறிப்பு வரைக : 'மூன்றடுக்குப் பஞ்சாயத்து முறை'. பிரமீடு வரைக.
3. ஊராட்சியின் கட்டாயப்பணிகளில் மூன்றினை எழுதுக.
4. ஊராட்சியின் தன்னார்வப்பணிகளில் மூன்றினை எழுதுக.
5. கிராம சபைக் கூட்டம் எப்பொழுது நடைபெறும்?

செயல்பாடு

## செயல் திட்டம்

ULB173

**உங்கள் பஞ்சாயத்தில் இருந்து கிடைக்கும் வசதிகளைப் பற்றி எழுதுக.**

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________



3rd_Social_Science_Unit_3.indd 157 2/19/2020 8:17:29 PM